# தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்

**சுற்றறிக்கை எண். 122909/ட்டி3 /2022, நாள் 21.01.2023**

**வணிகவியல் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இணையவழியாக சமர்ப்பித்த பின்பு திருத்தங்கள் செய்வதற்கு செலுத்த வேண்டிய அபராதக் கட்டணங்கள்**

பார்வை: 1. சுற்றறிக்கை எண். 122909/ட்டி3/2022, நாள் 19.11.2022.

2. 03.01.2023 அன்று நடைபெற்ற 60வது தேர்வு வாரியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம்.

*******

பார்வை (1)-ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி விண்ணப்பங்களை சரிசெய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்த பிறகு திருத்தம் கோரி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் திருத்தங்களுக்கு தகுந்தவாறு அபராதத் (Penalty) தொகை செலுத்த வேண்டும் எனவும், திருத்தங்கள் செய்வதற்கு ஒவ்வொரு திருத்தத்திற்கும் தனித்தனியாக கட்டணம் செலுத்த வேண்டும் எனவும், மேலும் திருத்தங்கள் செய்வதற்கு அந்தந்த பாடத்திற்குரிய தேர்வு கட்டணத்தில் 100 மடங்கு கட்டணத் தொகை செலுத்த வேண்டும் எனவும், அதன் பிறகே திருத்தம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பார்வை (2)-ல் கண்டுள்ள 60வது தேர்வு வாரியக் கூட்டத்தில், விண்ணப்பங்களை சரிசெய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்த பிறகு திருத்தம் கோரி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் திருத்தங்கள் செய்வதற்கு அந்தந்த பாடத்திற்குரிய தேர்வு கட்டணத்தில் 100 மடங்கு கட்டணத் தொகை என்பதற்கு பதிலாக 10 மடங்கு கட்டணத் தொகை செலுத்த

வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், இனிவரும் காலங்களில் விண்ணப்பங்களில் திருத்தங்கள் செய்வதற்கு அந்தந்த பாடத்திற்குரிய தேர்வு கட்டணத்தில் 10 மடங்கு கட்டணத் தொகை செலுத்தினால் திருத்தம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- க. லட்சுமிபிரியா
தலைவர், தேர்வு வாரியம்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

eSign
Signed by: PRABAKARAN KAMALAKANNAN
Reason: official
Location: Chennai, India
Date: 22-Jan-2023 (10:35 AM)

கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) (மு.கூ.பொ)